13ஆவது வருடத்தில்....

# விளம்பரம்

VLAMBARAM™

☎ 416-282-8059    416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை    மாதமிருமுறை    இலவசம்

5வது இதழ் வெளிவந்துவிட்டது

உலகத் தமிழோசை

ஒரு தேசம் காணும் கனவு

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)

HOMELIFE HIGHER STANDARDS

Direct: 416.315-9397

OFFICE: 416.321-6969

Sales Agents Welcome

நதி 13    NOVEMBER 15, 2003    பாலம் 22



புதிய ரொறொன்ரோ மாகாண மேயர் திரு. டேவிட் மில்லர்.



எம்மை நினைத்து யாரும் கலங்கக் கூடாது. மாவீரர் நாள் நவம்பர் 27, 2003

## ரமளான் பெருநாள் நல்வாழ்த்துக்கள்

## Santa Parade



## தமிழர் மாவீரர் நாள்

கனடாவில் மாவீரர் நாள்
கண்களை விழிக்க வைக்கும்
தீபாவளி விளக்கீடு நாள்
தீபமாய் மிளிரும் வீடு

தங்களை ஈர்ந்த வீரர்
தற்கொடை செய்த மக்கள்
தரம்மிகு தம்பி தங்கை
தமிழரின் வீரம் போற்றும்

எங்களில் ஒருவர் நீங்கள்
எழில்மிகு போர்வீரர்கள்
பஞ்சமா பாதகர்தனை
படையொடு அழித்த வீரர்

மிஞ்சுமா எதிரி படைகள்
மின்னலாய் பாய்ந்து நீங்கள்
கொஞ்சமா வீரம் படைத்தீர்
கொள்கையில் உயர்ந்த சீலர்

- உதயன் துரை

## அருள் விருந்து

* ஆத்மாவின் தேவைகளுள் மிகப் பெரியது அறநெறி ஒன்றே.
* அமைதியான வேளைகளில் நமது பேரியல்பை நாம் உணருகிறோம்.
* தன் பெருமையை மிகைப்படுத்துபவன் உண்மையில் அதைச் சிறுமைப்படுத்துகிறான்.
* சாந்தம் என்னும் பெருநிலை மதிமயக்கத்தினின்று வருவதல்ல; அது மனத் தெளிவின் விளைவு.
* வெறுப்பும் சண்டையும் உலகை உய்விக்கமாட்டா. அன்பும் பணிவிடையும் உலகை உய்விக்கும்.
* வாழ்வை அனுபவிக்க விரும்புபவர்கள் அதிலுள்ள மையல்களினின்று தப்பித்துக் கொள்வது அவசியம்.
* இவ்வையகத்தில் தனது இன்பத்தை வளர்ப்பவன் தனது துன்பத்தையும் வளர்த்துக் கொண்டே வருகிறான்.

Since 1987

வசந்தா நகை மாளிகை

வசந்தன் - பத்மநாதன்

பத்தர்களின் கைவண்ணத்தில் தங்கத்தின் புதிய வடிவங்கள்!

TEL: 905 848 5151    FAX: 905 848 8502

OPEN 10:30AM - 8:30PM    MONDAY CLOSED

3025 HURONTARIO ST., UNIT. 103A, MISSISSAUGA

Singapore Communication

Since 1991

Unbelievable $20 package

with 150 Mins Free and

Evenings & Weekends Free

For More Info come In Store

Hurry This Incredible Offer Ends soon

More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

•Auto •Home •R.R.S.P •Life •Disability

•Mutual Fund •Group Insurance •Child Education •Travel & Business

416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

9.00A.M - 9.00P.M

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்



# செய்யும் தொழிலில், வெற்றி பெற



வங்கியில் சென்று கடன் கேட்டேன். கடன் தரவில்லை. என்று பலரும் குறை படுகிறார்கள். வங்கி யாருக்கும் கடன் கொடுக்கவில்லை என்றால், அந்த வங்கி நிலைத்து இருக்க முடியாது. இது உண்மை. மளிகைக் கடைக்காரர் பொருட்களை வாங்கி இலாபத்துக்கு விற்பதையும் போல, வங்கியும் பணத்தை மற்றவர்களிடமிருந்து (வட்டிக்கு) வாங்கி, இலாபத்துக்கு தகுந்தவர்களுக்குக் கடனாக (அதிக வட்டிக்குக்) கொடுக்கின்றது. கடன் கொடுக்க வேண்டும் என்பது வங்கிக்கு இருக்கும் கட்டாயம். ஆனால் யாருக்குக் கொடுக்க வேண்டும், எப்படிக் கொடுக்க வேண்டும் என்பதற்கு கடன் கொடுக்கும் அதகாரிக்குப் பல வரைமுறைகள் அணுகுமுறைகள் வங்கியால் சொல்லப்பட்டிருக்கின்றது.

## பெரி. முத்துராமன்

வங்கியை எப்படி நீங்கள் அணுகினால் உங்களுக்கு கடன் பெறும் வாய்ப்பு இருக்கின்றது என்பதை இங்கு பார்ப்போம். முதலில் கடன் பெற வருபவரிடம் வங்கி என்ன எதிர்பார்க்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

* உங்களைப் பற்றிய விபரம்.
* உங்கள் தொழில் அல்லது வியாபாரத்தைப் பற்றிய விபரம்.
* உங்களின் பொருளாதார பலம், கடந்த கால கடன் சரித்திரம்.
* உங்களுடைய முதலீடுகள் மற்றும் கூடுதலாக உங்களால் என்ன அடமான-மாக கொடுக்க முடியும் என்ற விவரம்.

மேற்குறிப்பிட்ட நன்கு விபரங்களுமே அடிப்படையில் உங்களுக்குக் கடன் தரவேண்டுமா, வேண்டாமா என்பதை தீர்மானிக்கும் காரணிகளாக உள்ளன.

நீங்கள் ஒரு முடிவை உங்கள் அனுமானிய சக்தியின் மூலமாகக் கூட முடிவு செய்யலாம். ஆனால் வங்கி அதிகாரிக்கோ எல்லாம் பத்திரத்தில் தெள்ளத் தெளிவாக எழுத்தில் இருக்க வேண்டும். நீங்கள் சொல்லும் அல்லது எழுதும் ஒவ்வொரு வாக்கியத்தையும் நிரூபிக்கக் கூடிய ஆதாரம் உங்களிடம் இருக்க வேண்டும். நான் நினைக்கிறேன் என்று சொன்னால் அது எடுபடாது. கடனும் கிடைக்காது.

உங்களிடம் வெற்றி பெறக்கூடிய தன்மை இருக்கிறது என்பதையும், இந்தத் தொழிலில் (கடன் பெற்ற பின்) எவ்வாறு வெற்றி பெறுவீர்கள் என்பதையும் வங்கி அதிகாரிக்குத் தெளிவாக உணர்த்துங்கள். ஒன்றை நீங்கள் நம்பவில்லை என்றால், அதை மற்றவர்களுக்கு உணர்த்த முடியாது. உங்களுக்கு வங்கி கேட்கும் ஆவணங்களை எவ்வாறு தயார் செய்வது என்று தெரியவில்லையானால், தக்கோரை அணுகி, தயார் செய்து கொள்ளவும்.

கடன் பத்திரங்களை வங்கியிடம் கொடுக்கமுன், விவரம் தெரிந்த நண்பர் அல்லது உறவினரிடம் கொடுத்து, அவர்கள் அபிப்பிராயத்தைக் கேளுங்கள். வங்கி அதிகாரியிடம் உங்கள் கடன் மனுவைக் கொடுக்கும் போது, பரீட்சைக்குச் செல்லும் மாணவனைப் போல், நடுக்கத்துடன் இருக்காதீர்கள்.

இன்னொரு விடயம், வங்கியின் வேலை உங்கள் தொழிலுக்குக் கடன் கொடுத்தலே ஆகும். திட்டமிடல் அல்ல, உங்களிடம் சரியான திட்டம் இல்லை எனில் கடன் கிடைப்பதும் அரிதாகும். எப்படி வியாபாரத்திட்டத்தைத் தயாரிப்பது? உங்களுக்குத் தெரிந்திருந்தால் நல்லது. தெரியவில்லையேல், தக்கோரை அணுகி சிறந்த வணிகத் திட்டத்தை (Business Plan) முதலில் தயார் செய்து கொள்ளுங்கள்.

உங்கள் பணத்தை எவ்வளவு தூரம் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளீர்கள் என்பதை வங்கி கவனத்தில் கொள்கின்றது. உங்கள் பணம் கூடக் கூட உங்கள் தொழிலின் மேல் வங்கிக்குக் கடன் கொடுக்கும் நம்பிக்கையும் கூடலாம்.

வங்கி அதிகாரியிடம் எவ்வளவு கடனாகத் தருவீர்கள் என்று கேட்காதீர்கள். உங்கள் திட்டத்தின் அடிப்படையில் உங்களுக்கு எவ்வளவு தேவை என்று நம்பிக்கையோடு கூறுங்கள்.

ஒருவேளை எல்லாம் செய்தும், வங்கி அதிகாரி "இல்லை" என்று சொல்லி விட்டால், காரணத்தைக் கேளுங்கள். குறையை நிவர்த்தி செய்து, மறுபடியும் அதே வங்கியையோ வேறு வங்கியையோ அணுகுங்கள். முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை.

*உங்கள் தொழிலில் உங்கள் நேரத்தையும் பொருளையும் சேமிக்க, இலாபத்தை அதிகரிக்க, ஆலோசனைகளுக்கும், மறு ஆலோசனைகளுக்கும் திரு. பெரி. முத்துராமனுடன் தொடர்பு கொள்ளுங்கள். இவருடைய Success Biz Solution நிறுவனத்தின் வாயிலாக பல தொழில் முனைவர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். நீங்களும், இன்றே பயன் அடைய இப்போதே 416 430 0623 அல்லது (C) 416 278 2026 இல் தொடர்புகொள்ளுங்கள்.*

*பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பொற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu Businessline மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.*

**வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாக தரவும்.**


**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12

Professional Photographer - கதிர்

416 - 750 - 8118

2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough



**YARLCAN**

**STEAM CLEANING**

* DUCT CLEANING
* CARPET CLEANING

உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-

மோகன்: (905) 887-7436

Cell: (416) 721-9709



**SAFETY TRUCKS**

**Training School Ltd.**

Training & Trucking

Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (9ஆம் ஆண்டு)

We Accept Welfare & Unemployment Insurance

வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




*In Classes*
* *365 (Learning Permit)*
* *Lock Books*
* *Air Brake (Z)*
* *Dangerous Goods*
* *Border Crossing*
* *Defensive Driving Course*

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

16 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

(905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON

# APPLEMORE AUTOMOTIVE

**உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

**435 Midwest Road. Unit B5,**
**Scarborough, ON. M1P 3A6**

SPECIAL




## BATTI NITE 2003

### மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி
### (St. Michael's College - Batticaloa)
### பழைய மாணவர் சங்கம்

கல்லூரியின் வருடாந்த இராப்போசன விருந்தும், நத்தார் (Christmas) கொண்டாட்ட சிறப்பு நிகழ்ச்சியும் எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு Scarborough Eastown Banquet Hall 2648 Eglington Avenue East (Brimley & Eglington) நடைபெறவிருக்கிறது. சகல பழையமாணவர்களையும் கனடாவில் வாழும் சகல மட்டக்களப்பு மாவட்ட நண்பர்களையும் நலன்விரும்பிகளையும் அன்போடு அழைக்கின்றோம். மேலதிக விபரங்களுக்

இன்பராஜா - 416-752-0898/ 416-890-6749 நிரஞ்ஜன் - 416-817-2548
சுரேஸ் கணேஷசமூர்த்தி - 416-751-1295 அலெக்ஸ் - 905-896-1422

---

## மனவெளி கலையாற்றுக் குழு - கனடா

கனடாவில் பல தரமான நாடகங்களை மேடையேற்றி வரும் சீரிய நாடக அமைப்பான மனவெளி கலையாற்றுக் குழுவின் பதினோராவது அரங்காடல் எதிர் வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை), வார்டன் & HWY 7 சந்திக்கு மணிக்குமாக இரு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளது. நாடகங்கள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

---

## அருள் மிகு கனடா கந்தசுவாமி கோவிலினால் நடத்தப்பட்ட தீபாவளித்திருநாள் - 2003
### பரிசு பெறுவோர்

733 Birchmount Road இல் அமைந்துள்ள அருள்மிகு கனடா கந்தசுவாமி கோவிலினால் நடத்தப்பட்ட தீபாவளித்திருநாள் - 2003 அன்றையதினம் 08-11-2003 சனிக்கிழமை சபையோர்களின் முன்னிலையில் குலுக்கப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில் அதிஸ்டசாலிகள் மூவர்களின் இலக்கங்கள் பின்வருமாறு.

முதல் பரிசு இலக்கம் - 1555417 - T.V
இரண்டாம் பரிசு இலக்கம் - 1555410 - D.V.D
மூன்றாம் பரிசு இலக்கம் - 1555225 - V.C.R

மேற்கூறிய பரிசுக்குரிய அதிஸ்டசாலிகள் தங்கள் இலக்கத்தை ஆலய காரியாலயத்தில் காட்டி பரிசுகளை பெறுமாறு வேண்டுகின்றோம்.

பக்தியுடன் ஆலய அறங்காவல் சபையினர்
தொடர்புகளிற்கு - 416-438-1882

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**


## BUSINESS FOR SALE - CATERING & TAKE-OUT



FINCH & PHARMACY சந்திப்பில் வியாபாரம் நடைபெறும் CATERING & TAKE-OUT தொழில் விற்பனைக்கு உண்டு. நியாயமான வாடகை. கேட்கப்டும. வலை $65,000 மட்டுமே. மேலதிக தகவல்களிற்கு:
ஜஸ்டின் வில்லியம்:
416-803-7344 /416-321-6969




**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**


## Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்
'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்

பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்
"நீலம் சில்க்"



- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

**T.P: 416-778-7455**
**Fax: 416-778-8484**
1453 GERRAD STREET, EAST
(INDIAN BAZZAR)

**T.P: 416-759-2002**
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

வீடு வாங்க, விற்க



சசி செல்வரட்ணம்




**Sasi Chelvaratnam**

Sales Representative

**Cell: (416) 725-1125**

Bus: (416) 321-6969 Fax: (416) 321-6963

Email: chelvaratnamsasi@hotmail.com

**HomeLife GTA** Realty Inc., Real Estate Broker

1711 McCowan Rd.,Suite 206,

Scarborough, ON. M1S 3Y3.




**Markham/Sheppard**
**1+1 Bedrooms**
**Asking $133,900**



**Neilson/Sheppard**
**2 bbedrooms**
**Asking $139,000**



**Middlefield/Steels**
**4+3 Bedrooms**
**5 Washrooms**
**Asking $451,900**



**Neilson/Sheppard**
**3 Bedrooms**
**Asking $159,900**



**Markham/16th Ave**
**4 Bedrooms**
**3 Washrooms**
**Asking $369,000**



**Greenln/Kinngscollege**
**3 Bedrooms**
**3 Washrooms**
**Asking $294900**

# சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து!



## MARKHAM விளக்கிய மார்க்கங்கள்

*மார்க்கம் 1.*
*"ஏட்டு சுரக்காய் கறிக்குதவாது"*


*"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - மண்ணில் ஒற்றுமை நீங்கிடின் அனைவர்க்கும் தாழ்வே". - பாரதியார்*

அரிவரி வகுப்புப் பாடப் புத்தகங்கள் முதலாக மேற்சொன்ன வாசகங்களை திரும்பத் திரும்பப் பலமுறை நாம் படித்திருந்தும், பத்திரிகைகளில் ஒற்றுமை யின்மையால் வரும் நட்டங்கள் பற்றி வந்த செய்திகளை அடிக்கடி நாம் வாசித்து மறந்திருந்தும், வானொலிகள், மேடைகளில் ஒற்றுமைபற்றி வாய்கிழியக் கத்தினாலும், ஈழமண்ணில் எம்மிடையே ஒற்றுமையின்மையால் எமக்குண்டான அழிவுகளை விரைவாக நாம் மறந்து போனதாலும் உண்டான பலாபலன்களை MARKHAM பிரதேசசபை, நகரசபை, கல்விச்சபைக்கான தேர்தல் முடிவுகள் எமக்குப் பாடமாக, மீண்டும் தந்துள்ளது. எத்தனையோ பாடங்களை நாம் திரும்பத் திரும்பப் படித்திருந்தும் என்ன பிரயோசனம்? தேர்தலில் தோல்வியையும், மற்றைய இனத்தவர்களின் ஏளனத்திற்கும் ஆளாகும் வகைகளில் எம்மை நாமே தாழ்த்திக் கொண்டதும்தான் மார்க்கம் நகரத் தேர்தலில் நாம் கண்ட பலனாகும்.

*எப்போது நாம் திருந்தப் போகின்றோம்?*

*மார்க்கம் 2.*
*"மக்கள் சேவை"*

*மக்களுக்கு சேவை செய்வது கடவுளுக்கு செய்யும் சேவை போன்றது எனும் வகையிலேயே மக்கள் சேவையே மகேசன் சேவை என்றார்கள். மக்களுக்கு சுயநலமற்ற ஒரு தொண்டாக எவர் ஒருவர் சேவை செய்யத் தலைப்படுகின்றாரோ அவர் தான் உண்மையில் மக்களால் அங்கீகரிக்கப்படுவார் என்பதுவே ரொறொன்ரோ மாநகரசபைத் தேர்தலில் David Miller இற்கு கிடைத்த வெற்றி பலருக்குத் தரும் படிப்பினையாகும். படித்தவர்களும், பணம் படைத்தவர்களும் தேர்தலில் நின்று வெற்றி பெற்று விடலாம் என்ற நப்பாசைக்குக் கிடைத்த சவுக்கடியாகும். தேர்தலில் நின்று வெற்றி பெற்று அதனால் வர இருக்கும் பணத்தை எண்ணிப்பார்த்து தேர்தலில் நிற்காமல் மக்களை உண்மையாக நேசித்து சுயநலமற்ற தொண்டராக எவர் ஒருவர் உழைக்கின்றாரோ அவருக்கு வாழ்க்கையிலும், தேர்தலிலும், வெற்றி நிச்சயம். அதுவே நீதியும் தர்மமும் ஆகும்.*




மார்க்கம் 3. "ஈழமக்கள்"

ஈழமண்ணில் இன்று வாழ்ந்து கொண்டு இருக்கும் எமது இனமக்களுக்கும், வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டு ஈழமண் பற்றிய உண்மையான உணர்வுகளோடும், கனவுகளோடும் வாழ்ந்து கொண்டு இருக்கும் என் போன்ற ஒரு சில ஈழத்தமிழர்களுக்கும் ஈழமண்ணின் விடியலுக்கான நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பவர்கள் LTTE இயக்கத்தினரே. பல நாட்டு அரசாங்கங்களினாலும் தடைசெய்யப்பட்டும் விடுதலைப்புலிகளின் பெயருக்கு இன்னமும் களங்கம் விளைவிக்க, இனவெறியை உண்ணும் உணவின் உப்பாக பாவிக்கும் சிங்கள அரசியல் வாதிகள் முயன்று வருகின்ற இவ்வேளையில், விடுதலைப்புலிகளின் பெயரிற்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டிய சேவைகள் செய்வதே சிறந்தது. அதன் மூலம் விடுதலைப் புலிகள்மீது அனைத்து மக்களும், நாடுகளும், அரசாங்கங்களும் மதிப்பு வைக்கவும், ஈழத்தமிழ் மண்ணில் விடிவு பிறக்கவும் வழி கிடைக்கும்.

*உணர்வுகளால் ஆளப்படுகின்றோம் - நல்ல உள்ளத்துடன் வாழ்ந்திடுவோம்.*

பரம் ஜி.
ஒரு சாதாரணமனிதன்


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும். * உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள் * விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்



(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON



**LARGE INDOOR PUBLIC CAR AUCTION**

**EVERY WEDNESDAY EVENING**
**STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM**

100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL
> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
> V.W., & OTHER FOREIGN
& DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

**WEEKLY CASH BUYERS DRAWS OPEN**
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM

**FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM**

*1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.*

**CIA PUBLIC AUTO AUCTION & SALES**
**416 - 242 - 5052**
www.cialeasing.com





வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!


பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி

பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில் முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

**Param Gnana**
Sales Representative
HomeLife GTA
Realty Inc.

www. themathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)






# நாமும் நமது இல்லமும் 176

## வீட்டில் மின் சக்தியை (Electrical) சக்தியை (Energy) எவ்வாறு சேமிக்கலாம்.

சராசரியாக ஒன்ராரியோ வீட்டுப் பாவனைகளின் சக்தி பாவிப்பதிலிருந்து எடுத்த கககணக்கின்படி,



நன்றி - *Toronto Star*

1. வீட்டை வெப்பமாக்க (Heating), குளிராக்க (Cooling) (57% - 69%)
2. தண்ணீரை சூடாக்குவதற்கு 20% - 21%
3. வீட்டில் பாவிக்கும் சாதனங்கள் 12% - 13%) (Washer, Dryer, Fridge, Stove, Dishwasher...)

**ராஜா மகேந்திரன்**

4. வெளிச்சப்படுத்தல் (Lighting) 4% -5%

மேலுள்ள தரவுகளின் நிமித்தம் வீட்டை குறிப்பிட்ட வெப்பநிலையில் வைத்திருப்பதற்காகவே ஆகக்கூடிய சக்தி பாவிக்கப்படுகிறது. இதனை தகுந்த முறையில் பாவிப்பதன் மூலமாகவே குறிப்பிட்ட பணத்தைச் சேமிப்பதனுடன், எமக்கும்/ நாட்டிற்கும் உதவி செய்தவர்களாவோம்.

### மின்சக்தியை சேமிக்க, நாம் செய்யக்கூடியவை:

1. சமையலறை (Kitchen)


குளிர்சாதனப்பெட்டியை (Fridge) ஆகக்குறைந்த குளிர்நிலையில் (Too cold) வைத்திருப்பதைத் தவிர்க்கலாம்.

கதவுகளின் ஓரத்தினூடாக காற்று போய்வருவதைத் தவிர்ப்பதற்கு தகுந்த Seal பாவிக்கலாம்.

* Fridge இன் பின்பக்கதில் (வெளிப்பகுதி) இருக்கும் Coil களைத் துப்பரவாக்கி தூய்மையாக வைத்திருக்கலாம்.
* Ice உருவாக்குவதைத் தவிர்க்கலாம்.
* தேவைக்கு அதிகமாக இருக்கும் பழைய Fridger ஐ வெளியே வீசி விடலாம்.
* Electrical Stove இற்கு பதிலாக Gas Stove பாவிப்பது.
* சிறிய சிறிய தேவைகளிற்கு Stove ஐ பாவிப்பதற்கு பதிலாக Micro oven ஐ பாவிக்கலாம்.
* தண்ணீரை சூடாக்க (Coffee, Tea) Stove இற்குப் பதிலாக கேத்தலைப் பாவித்தல்.
* Water taps களில் குறைந்த தண்ணீரை சிதறி வெளிப்படுத்தும் Low-Flow Aerator ஐப் பாவிக்கலாம்.
* தண்ணீரை சிந்திக்கொண்டு இருக்கும் FAUCET களிலுள்ள Washer களை மாற்றிக்கொள்ளவும்.
* பாத்திரத்தை Stove இன் Coil இல் வைக்கும்போது அதனது அளவிற்குகேற்ப Coil இல் வைப்பது நல்லது.

**1984 ஆண்டிலிருந்து 2002ஆம் ஆண்டுவரை ஐந்து வருட மோட்கேஜின் பெறுமதி வீதத்தில் (Residential Mortgage)**

| Year / année | Jan / jan | Feb / fév | Mar / mar | Apr / avr | May / mai | Jun / jun | Jul / jul | Aug / aoû | Sep / sep | Oct / oct | Nov / nov | Dec / déc |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1984 | 12.55 | 12.52 | 12.82 | 13.51 | 14.26 | 14.53 | 14.96 | 14.45 | 13.99 | 13.72 | 13.25 | 12.74 |
| 1985 | 12.44 | 12.57 | 13.43 | 12.77 | 12.38 | 11.89 | 11.75 | 11.77 | 11.85 | 11.96 | 11.75 | 11.61 |
| 1986 | 11.67 | 11.94 | 11.66 | 11.12 | 10.60 | 10.87 | 11.06 | 11.00 | 11.10 | 11.25 | 11.25 | 11.17 |
| 1987 | 10.85 | 10.46 | 10.20 | 10.39 | 11.04 | 11.26 | 11.26 | 11.49 | 11.72 | 11.97 | 11.49 | 11.56 |
| 1988 | 11.73 | 11.49 | 11.08 | 11.04 | 11.29 | 11.41 | 11.40 | 11.92 | 12.16 | 11.79 | 11.78 | 12.13 |
| 1989 | 12.24 | 12.23 | 12.41 | 12.72 | 12.29 | 11.93 | 11.85 | 11.76 | 11.75 | 11.75 | 11.75 | 11.95 |
| 1990 | 12.01 | 12.42 | 12.92 | 13.67 | 14.21 | 14.03 | 13.97 | 13.56 | 13.40 | 13.21 | 13.04 | 12.49 |
| 1991 | 12.13 | 11.58 | 11.45 | 11.27 | 11.23 | 11.24 | 11.31 | 11.47 | 11.38 | 10.84 | 10.14 | 9.84 |
| 1992 | 9.71 | 9.68 | 10.06 | 10.37 | 10.14 | 9.72 | 9.26 | 8.72 | 8.54 | 9.23 | 9.33 | 9.48 |
| 1993 | 9.47 | 9.44 | 8.97 | 8.89 | 8.88 | 8.86 | 8.68 | 8.58 | 8.57 | 8.55 | 7.84 | 7.71 |
| 1994 | 7.33 | 7.20 | 7.89 | 9.43 | 9.48 | 9.80 | 10.69 | 10.33 | 10.01 | 9.84 | 9.85 | 10.25 |
| 1995 | 10.60 | 10.48 | 9.93 | 9.66 | 8.98 | 8.67 | 8.54 | 8.94 | 8.95 | 8.75 | 8.66 | 8.46 |
| 1996 | 8.02 | 7.79 | 8.16 | 8.48 | 8.47 | 8.48 | 8.48 | 8.01 | 7.94 | 7.50 | 7.01 | 6.94 |
| 1997 | 7.14 | 7.12 | 7.06 | 7.56 | 7.46 | 7.22 | 6.98 | 7.00 | 6.96 | 6.73 | 6.69 | 6.90 |
| 1998 | 6.90 | 6.84 | 6.84 | 6.79 | 6.92 | 6.90 | 6.90 | 7.08 | 7.32 | 6.73 | 6.94 | 6.69 |
| 1999 | 6.72 | 6.79 | 7.03 | 6.71 | 6.99 | 7.35 | 7.42 | 7.80 | 7.67 | 7.90 | 8.13 | 8.13 |
| 2000 | 8.34 | 8.43 | 8.24 | 8.23 | 8.50 | 8.34 | 8.18 | 8.08 | 8.08 | 8.08 | 8.04 | 7.81 |
| 2001 | 7.58 | 7.52 | 7.19 | 7.22 | 7.38 | 7.47 | 7.46 | 7.39 | 7.03 | 6.74 | 6.51 | 6.64 |
| 2002 | 6.62 | 6.59 | 6.30 | 7.00 | 7.00 | 6.98 | 6.90 | 6.61 | 6.49 | 6.50 | 6.47 | 6.39 |




நன்றி - *Market Watch*


**Raja M. Mahendran, P. Eng.**
Broker/Owner
Office - 416- 321-6969 Direct: 416 315-9397
Email: raja@mahendran.ca

| Interest | Rate |
|---|---|
| 5 YrsMortgage | 5.15% |
| Prime rate | 4.50% |
| Bank rate | 2.75% |

புதிய முகவரியில் விசாலமான இடத்தில் சகல வசதிகளுடனும்......
**A1 கொழும்பு போட்டோ ஸ்ருடியோ**
Division of A1 St - Francis
DIGITAL PHOTO STUDIO
உங்கள் வசதிக்கேற்றவாறு முன்கூட்டியே பதிவு செய்தால் 24 மணிநேரமும் திறக்கப்படும்.
Digital Professional Enlargement
From CD, Floppy, SD Midea, Smart Media, Memory Stick, Compact Flash & Negatives...
DIGITAL VIDEO TRANSFER
ANY TO ANY SYSTEM PAL, NTSC, SECAM FROM VIDEO CASSETTE TO VCD OR DVD
WEDDING PACKAGE FROM $500 TO $10,000
மார்கழி மாதத்தில் நத்தார் தாத்தாவுடன் இலவசமாக படம் எடுக்கப்படும்.
www.colombophoto.com
www.saintfrancisphoto.com
இலவசம் இலவசம் இலவசம்
பாஸ்போர்ட், சிற்றிசன், லாண்ட்ட போட்டோ, ஐ டி படம் எடுக்க வரும் ஜோடிகள், குடும்பத்தினருக்கு இரண்டு 5 x 7 ஸ்ருடியோ போட்டோ இலவசம் (அதன் பெறுமதி $20.00)
CEDARFACE PLAZA
2296 Eglinton Ave. East
Unit #6, Lower Level (Basement)
Birchmount & Eglinton
416 752 4444
திருமணம், பிறந்த நாள், அரங்கேற்றம், பூப்புனித நீராட்டு விழா, குடும்பப் படம், குழந்தைப் படம் (கலர்-கறுப்பு & வெள்ளை)
பாஸ்போட், சிற்றிசன் லாண்டட் போட்டோ ஐ டி (கலர்-கறுப்பு & வெள்ளை)
இன்னும் பல, பல.......
"அனைத்து போட்டோ வீடியோ படப்பிடிப்புக்கள்,எல்லா விதமான போட்டோ, வீடியோ வேலைகள்"
Lawrence Ave. Warden Ave. Birchmount Rd 2296 Eglinton Ave. Kennedy Rd St.Clair Ave.

**JAMUNA WINDOW COVERING**





DRAPES & BLINDS
தொடர்புகளுக்கு: 416-298-0234
PAGER : 416-426-8986

# MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below*





*LOW - LOW RATES AVAILABEL. TO GET BEST RATE IN TOWN PL. CALL: ANIL JOSHI*

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply







For more information call:
**Anil Joshi** at
**416.888.1072**

# சுவடுகள்




எந்நிலை வரினும் - மாறிடாத
வடுக்கள் இவை;
எப்படியான மறந்திடல்
முடியும்...... !
புதைகுழிகளும் சிறையிருப்புக்களும் -
தாயின் கதறல் ஓசைகளும் ....!
ஏழை மக்களின் கண்ணீர் சிதறல்களும்
எத்தனை எத்தனை...;
துயரச் சுமைகளாய் மனதிலே;
சுவடுகளாய் பதிந்துவிட்டதை
எப்படி மறந்திட முடியும்.

- எஸ். பானு


Higher Standards

HomeLife GTA
Realty Inc., Real Estate Broker
McCowan Rd., Suite#206,
Scarborough ON. M1S 3Y3

Bus: (416) 321-6969
Cell: (416) 666-5515
Fax: (416) 321-6963

ஏராளமான
விளம்பரப் பட்டியல்களில்
அடியேனையும் சேர்த்து
என்ன செய்வது ?
சொல்ல வேண்டிய என் கடமையினை
என் கை படவே எழுதிக்கொள்கிறேன்
விரும்பினால் அழையுங்கள்
வீடு, மனை, வாகனங்களை
வாங்க சௌகரியங்களோடு
பெற்றுக்கொள்ள !!!
அன்புடன்
சிவ சர்மா





நான் வழக்கறிஞர் இல்லை

சட்ட
ஆலோசனைகளுக்கு

கலகலப்பு தீசன்





S. K. Theesan

www.kalakalappu.net

(416) 490 9199



TELUS

MiKE TELUS

★ இலவச தொலைபேசி ★
6 மாதங்கள் வரை எவ்வளவு வேண்டுமானாலும்
இலவசமாக உரையடலாம்!

+ 6 moths of unlimited dispatch






நீங்கள் FIDO வாடிக்கையாளரா?
அப்பபடியானால் Telus Mobility யுடன்
இணைந்து கொள்வதற்குரிய
தருணம் இதுவே!

- இலவச தொலைபேசி
- 6 மாதம்வரை இலவச தொலை -பேசி அழைப்புகள்
- மிகச் சிறப்பான திட்டங்கள்
- FIDO வில் பெறும் அதே சலு -கைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
- ஆறுமடங்கு விசாலமான Coverage
- உங்கள் FIDO நண்பர்களை அழைத்து வருவதன் மூலம் $20 பெறுமதியான Gift Certificate களை பெறுங்கள்

முக்கிய குறிப்பு: எந்த வகையான FIDO திட்டமானாலும் சகலரும் அதை Telusற்கு மாற்றிக் கொள்ளலாம்!

$30 திட்டம்
Unlimited Evening & Weekends
+ Lunch Hour (12:00pm-1:00pm)
50 Any Time Minutes
Free
Call Waiting
Conference Calling
Voice Mail






$40 திட்டம்
Unlimited Evening & Weekends
350 Any Time Minutes
Free
Call Waiting
Conference Calling
Voice Mail






$40 திட்டம்
Unlimited Evening & Weekends
400 Any Time Minutes
Free
Caller ID
Call Waiting
Call Forwarding
Voice Mail

Unlimited Dispatch $40/Month

Car charger அல்லது லெதர் கேஸ் இலவசம்
இலவசமாக உங்கள் வீட்டுக்கோ வியாபார நிலையங்களுக்கோ வினியோகிக்கப்படும்.

Sam: 416 707 3794
Pagetron Communication Inc.

*Some restrictions apply call for details.

# விளையாட்டுத் தகவல்கள் - 135



## இந்திய மண்ணில் முன்னிணியில் அவுஸ்திரேலியா அணி!

நவம்பர் 13ஆம் திகதி பெங்களூரில் புதன்கிழமை நடைபெற்ற 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியின் லீக் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவிடம் 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது இந்தியஅணி.

இந்த முத்தரப்பு தொடரில்:- இத்துடன் அவுஸ்திரேலியா தொடர்ந்து 5 வெற்றி களை ஈட்டியுள்ளது.

**எஸ். கணேஷ்**

முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 347 ஓட்டங்கள் எடுத்தது.
348 என்ற கடின இலக்கில் களமிறங்கிய இந்தியா 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பில் 286 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.
இத்தொடரில் ஏற்கனவே இறுதி மோதலுக்கு அவுஸ்திரேலியா தகுதி பெற்றுவிட்டது. ஹைதராபாத்தில் சனிக் கிழமை நடைபெறவுள்ள ஆட்டத்தில் நியூஸிலாந்தைத் தோற்கடித்தால் தான் இந்தியா இறுதிக்கு தகுதிபெறமுடியும்.



சச்சின் 89: இந்திய அணியின் சச்சின் 89, சேவாக் 39, கங்குலி 37 ஓட்டங்கள் சேர்த்தனர். ஒருநாள் போட்டிகளில் சச் சினுக்கு இது 64வது அரைசதம் சைமன்ட்ஸ் 3 விக்கெட், ஹார்வீ 2விக்கெட் வீழ்த்தினர். முன்னதாக, அவுஸ்திரேலியா காப்டன் ரிக்கி பாண்டிங் துடுப்பாட்டத்தைத் தேர்ந்தெடுத்தார்.

கில்கிறிஸ்ட் அதிரடி: அதிரடி ஆட்டத்தில் மன்னனான ஆடம் கில்கிறிஸ்ட், நெஹ்ரா வீசிய ஆட்டத்தின் முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டினார். மேலும் ஒரு பவுண்டரியுடன் முதல் ஓவரிலேயே 15 ஓட்டங்கள் அவுஸ்திரேலியா எடுத்தது.
கில்கிறிஸ்ட், ஹேடன் தொடர்ந்து பவுண்டரிகளாக வீசி முதல் 15 ஓவர்களில் 105 ஓட்டங்கள் எடுத்தனர்.

அணியின் ஸ்கோர் 119 ஆக இருந்தபோது "லெக்" திசையில் ஹேடன் பந்தை அடித்தார். எனினும் அவர் கோட்டுக்குள் திரும்புவதற்குள் கங்குலி எறிந்த பந்தை பிடித்த திராவிட் ஆட்டமிழக்கச் செய்தார்.

ஹேடன் 45 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 44 ஓட்டங்கள் எடுத்தார்.

ஹேடன் ஆட்டமிழந்தவுடன் ஓட்டங்கள் எடுக்கும் வேகம் சிறிது நேரத்துக்கு மட்டுப்பட்டது. எனினும், மறுமுனையில் கில்கிறிஸ்ட் தொடர்ந்து அதிரடியாக விளையாடினார்.

கில்கிறிஸ்டின் முதல் சதம்: கங்குலி பந்துவீச்சில் ஒரு ஓட்டம் எடுத்து இந்தியாவுடனான 25 ஆட்டங்களில் தனது முதல் சதத்தை கில்கிறிஸ்ட் பூர்த்தி செய்தார்.

எனினும், 104 பந்துகளில் ஒரு சிக்சர், 14 பவுண்டரிகளுடன் 111 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது கும்ப்ளே வீச்சில் பவுண்டரி எல்லையில் ஜாகீர்கானிடம் பிடி கொடுத்து கில்கிறிஸ்ட் ஆட்டமிழந்தார்.
'சிக்சர்' பாண்டிங்: ஆனால், அதன் பின்னர் பாண்டிங் விளாசத் தொடங்கினார்.

பாண்டிங் 102 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 7 சிக்சர்கள், ஒரு பவுண்டரியுடன் 108 ஓட்டங்கள் எடுத்தார். மார்ட்டின் 61 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.
ஒரு தின ஆட்டங்களில் பாண்டிங்கின் 15வது சதம் இது என்பது குறிப்பிடத்தக்கது.
நெஹ்ரா 80 ஓட்டங்கள்: உலகக் கோப்பை போட்டிக்குப் பின்னர் முதல்முறையாக பங்கேற்ற ஆஷிஷ் நெஹ்ரா 10 ஓவர்களில் 80 ஓட்டங்கள் வாரி வழங்கினார்.
இந்தியா தரப்பில் முரளி கார்த்திக் மட்டுமே சுமாராகப் பந்துவீசி 10 ஓவர்களில் 51 ஓட்டங்கள் கொடுத்தார்.

## முதல் தரத்தை தவற விட்டார் கிளிஜடர்ஸ் (ரெனிஸ்)

### லாஸ் ஏஞ்சல்ஸ் டென்னிஸ் கிளிஜஸ்டர்ஸ் சாம்பியன்

லாஸ் ஏஞ்சல்லில் நடைபெற்ற மகளிர் டென்னிஸ் சங்க ரூர் போட்டியில் பெல்ஜியத்தின் கிம்கிளிஜஸ்டர்ஸ் சாம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் கிளிஜஸ்டர்ஸ் 6-2,6-0 என்ற செற் கணக்கில் பிரான்சைச் சேர்ந்த அமெலீ மொரேஷ்மோவை வீழ்த்தினார். 52 நிமிடங்களில் இந்த சாம்பியன் பட்டத்தை வென்ற கிளிஜஸ்டர்ஸ், இந்த சாம்பியன் போட்டி முழுவதிலுமே தன்னுடைய சிறப்பான விளையாட்டு வெளிப்பட்டதாக கூறினார்.

இந்தப்போட்டியில் வெற்றி பெற்றாலும் தரவரிசையில் முதலிடத்துடன் இந்த வருடத்தை கிளிஜஸ்டர்ஸ் முடிக்க முடியாமற் போனது. பெல்ஜியத்தை சேர்ந்த மற்றொரு வீராங்கனையான ஜஸ்டின் ஹெனின் இந்த போட்டியின் அரையிறுதிக்கு முன்னேறியதன் மூலம் நம்பர் -1 இடத்தை தட்டிச் சென்று விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டும் இதே போட்டியில் கிளிஜஸ்டர்ஸ் சாம்பியன் பட்டம் வென்றிருந்தார். இந்த வெற்றியின் மூலம் இந்த வருடத்தை சாம்பியன் பட்டத்துடன் கிளிஜஸ்டர்ஸ் முடித்துள்ளார்.
இந்த வெற்றிக்காக கிளிஜஸ்டர்சுக்கு சுமார் 5 கோடி ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது.



**ஜவஹல் ஸ்ரீநாத் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு!!**

ஏறக்குறைய 10 வருடங்களுக்கு மேலாக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சிற்கு வலுசேர்த்து வந்த ஜவஹல் ஸ்ரீநாத் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 12 வருடகாலமாக இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சுக்கு வலுசேர்த்து, இந்திய அணியின் மறக்க முடியாத பல வெற்றிகளுக்கு முக்கிய காரணமாக இருந்து வந்த ஸ்ரீநாத் கடந்த 2 வருட காலமாக காயம் காரமாக அவதிப்பட்டு வந்தார். இந்த நிலையில் இந்திய அணியின் அவுஸ்திரேலிய பயணம் துவங்க சில நாட்களே உள்ள நிலையில், ஸ்ரீநாத் தனது ஓய்வினை அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய பயணத்திற்கு முழு உடற்தகுதியுடன் இல்லை என்று நினைத்தால் சர்வதேச கிரிக் கெட்டிலிருந்து ஓய்வு பெறப் போவதாக சமீபத்தில் கல்கத்தாவில் ஸ்ரீநாத் அறிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலிய பயணத் திற்கான இந்திய அணி நாளை அறிவிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் தன்னால் அவுஸ்திரேலிய பயணம் செல்ல முடியாது என்று உணர்ந்துள்ள ஸ்ரீநாத் ஓய்வினை அறிவித்துள்ளார். "ஆம், ஓய்வு பெறுவது என தீர்மானித்துவிட்டேன். ஓய்வு பெறும் நேரம் வந்துவிட்டது." என்று நிருபர்க ளுக்கு அளித்த பேட்டியில் ஸ்ரீநாத் கூறினார்.

மேலும் ஸ்ரீநாத் கூறுகையில், "ஓய்வு பெறுவது எனக்கு எந்த வருத்தமில்லை. இந்திய அணியின் வேகப்பந்து வீச்சு வலுவான நல்ல நிலையிலேயே உள்ளது. நெஹ்ரா, ஜாஹிர் போன்ற சிறந்த வேகப்பந்துவீச்சாளர்கள் அணியில் இருப்ப தால் ஓய்வு பெறுவது குறித்து எனக்கு கவலை ஏதும் இல்லை" என்று கூறினார்.

கபில்தேவிற்குப் பின்னர், இந்திய அணியின் வேகப்பந்து வீச்சை தோளில் சுமந்து வழி நடத்திச் சென்றவர் ஸ்ரீநாத் என்பது குறிப்பிடத்தக்கது.

67 டெஸ்போட்டிகளில் விளையாடி 236 விக்கெட்டுக்களை ஸ்ரீநாத் வீழ்த்தியுள்ளார். இதன் சாரசரி 30.49 ஆகும். 1999ஆம் ண்டு பெப்ரவரி மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற ஆசிய டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியில் பாகிஸ்தானிற்கு எதிரான போட்டியில் 82 ஓட்டங்கள் கொடுத்து 8 விக்கெட்டுகளை வீழ்த்தியதே டெஸ்ட் போட்டிகளில் ஸ்ரீநாத்தின் சிறப்பம்சமாகும். 229 ஒருநாள் போட்டிகளில் விளை யாடியுள்ள ஸ்ரீநாத் 315 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் அதிகமுறை 5 விக்கெட்டுகளை வீழ்த்தி யுள்ள இந்திய வீரர் ஸ்ரீநாத் ஆவார்.
1991 ஆம் ஆண்டு பிரிஸ்பேனில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் டெஸ்ட் அறிமுகத்தை ஸ்ரீநாத் துவக்கினார்.

2002 ஆம் ஆண்டு நடைபெற்ற மேற்குஇந்திய தீவுகளுக்கு எதிரான தொடருக்கு பின்னர் வியப்பளிக்கும் விதமாக திடீரென ஸ்ரீநாத் ஓய்வினை அறிவித்தார். ஆனால், கப்டன் கங்குலி யின் வேண்டுகோளை ஏற்று மீண்டும் ஸ்ரீநாத் போட்டிகளில் கலந்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இந்தியாவில் நடை-பெற்ற மே.இ.தீவுகளுக்கு எதிரான தொடரில் விளையாடிய ஸ்ரீநாத், கணுக்கால் வலியால் நியூசிலாந்து பயணத்தில் விளையாடவில்லை.
ஆனால், உலகக் கோப்பையில் முழு உடற்தகுதியுடன் கலந்து கொண்ட ஸ்ரீநாத், இந்திய அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற முக்கிய பங்கு வகித்தார். இந்தநிலையில் கர்நாடகத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஸ்ரீநாத் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.


**தமிழர் நிர்வாகத்தில் ஒரு**

**EMBASSY**

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது **ஆனால்**



- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்: 416-332-0944

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough **416-332-8451**

# ஆணுக்கு பெண் இழிவில்லை காண்



ஊமை என்று பெண்ணை
உரைக்கு மட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமை தான்
ஆடவர்க்கும் உண்டு
புலனற்ற பேதையாய்ப்
பெண்களைச் செய்தால் அந்
நிலம் விளைந்த பைங்கூழ்
நிலைமையும் அது மட்டே
- பாரதிதாசன்

அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் எனும் கூற்றில் பொருளீட்டிக் காக்கும் அப்பனிலும் பார்க்க அன்பு காட்டும் அன்னைக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டிருப்பது பெண்மையின் பெருமையைப் பேசுவதாகும். அம்மை நீ அப்பன் நீ ஒன்றே அருளாளர்களும் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது.

நா. க. சிவராமலிங்கம்

செல்வம் என்றால் இலட்சுமி, கல்வி என்றாள் கலைமகள், மண் என்றால் பூமாதேவி, விண் என்றால் ஆகாயவாணி, நீர் என்றால் கங்காதேவி, அன்னம் என்றால் அன்னபூரணி, மொழி என்றால் தாய்மொழி, நாடு என்றால் தாய்நாடு என்று நமக்கு ஆதாரமான எல்லாவற்றையும் பெண்மையாகக் கருதியமை நமது பண்பாட்டுப் பெருமையைப் பகர்வதுடன் பெண்மையின் மகத்துவத்தையும் மனங்கொள்ளச் செய்கின்றது.

பெண் கட்டிலறையில் தாசி, வட்டிலருகே தாய், எடுபிடி ஏவலுக்கு வேலைக்காரி, எதிர்கொள்ளும் இன்னலுக்கு தோழி, சிக்கல் நிலையில் ஆலோசனை கூறும் மந்திரி என்று இவ்வாறு பல்வேறு பாத்திரங்களை ஏற்று நல்ல துணையாய் வல்ல துணையாய் எல்லையில்லா இன்பம் எய்த ஏற்ற நற்துணையாக இருக்கின்றாள். வீடும் நாடும் அவளால் விளக்கமுறுகின்றன என்றால் மிகையில்லை. எனவே மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடவேண்டும் என்ற கவமணியின் கூற்று கனதி பெறுகின்றது. ஈரம் மிக்கவர்களாக இருக்கும் பெண்கள் வீரம் மிக்கவர்களாகவும் விளங்கியது அவர்களது உள்ளத்தின் உறுதிப்பாட்டை உணர்த்துகின்றது. மெல்லியவார் எனச் சொல்லப்படும் மாதர் தமக்கு அநீதி இழைக்கப்பட்ட வேளைகளில் சொல்லில் வடிக்க முடியாத வல்லமையுடன் செயலாற்றியமை அவர்களின் மன உறுதிக்கு எடுத்துக்காட்டாகும். பண்டைக்காலத்தில் பெண்கள் ஆட்சியாளர்களாய், அரசியல் ஆலோசகர்களாய், கல்வியாளர்களாய், புலவர்களாய், வீராங்கனைகளாய், அருளார்களாய் மிளிர்ந்தனர். உடலமைப்பால் அவர்கள் வேறுபட்டிருந்தாலும் போதனையாலும், சாதனையாலும் அவர்கள் ஆண்களுக்கு சளைத்தவர்களாகக் காணப்படவில்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்ததே மானிடம். அர்த்தநாரீசுவர வடிவம் இதனையே அறிவுறுத்துகின்றது. நீயொரு பாதி, நானொரு பாதி என்று நினைத்தால் சிறுமைக்கும் மடமைக்கும் இடமேயில்லை. ஆண்மை படைப்பவள் பெண். அத்துடன் ஆண்மைக்கு வலிமையும், வீரமுமம் இன்பமும் வெற்றியும் அளிப்பவள் அவள். ஆண்மையின் வீரத்திற்கு பெண்மையே காரணம் எனும் போது பெண்மையில் பேராற்றல் விளங்குகின்றது.

காலப்போக்கில் பெண்ணின் உரிமை பழுது பட்டதற்கு ஆண்களின் தன்னலமே காரணம் எனலாம். ஆண்கள் பெண்களை தமக்கு காமப் பொருளாகவும் பணியாளர்களாகவும் கருதினார்களோ அன்றே அவள் அடிமையாகிவிட்டார்கள். மனையாளும் தெய்வம். மனைவி வீட்டின் விளக்கு. அகத்திற்கு அழகு ஆமுடையாள். மடக்கொடி இல்லாதமனை பாழ். மங்கலம் என்பது மனைமாட்சி. மனைவி இல்லாத மனிதன் அரைமனிதன் என்பதால் பெண்மையின் வனப்பும் வண்மையும் பேசப்படுகின்றது. எனவே இத்துணை சிறப்புக்களுடைய பெண்மையை ஆண் தன் வன்மையால் அவள் தன்மை சிறுமையடையச் செய்வது மடமையாகும்.


RENOVATIONS



KITCHEN CABINET,
BASEMENT RENOVATION
மற்றும் சகல திருத்த வேலைகளுக்கு
அழையுங்கள்
416-757-3109



New Kalyani Catering & Take out

NOW

292 Markham Road, Scarborough, ON
416-261-9774



**கொத்துரொட்டி (ஆடு அல்லது கோழி)**
தண்டூரி Chicken
முட்டைச் சம்பல்
ரோல்ஸ்
Fruit Salad with Ice Cream

**Singapore Noodles (Chicken Shrimp)**
தண்டூரி Chicken
கட்லட்
Fruit Salad with Ice Cream

**New Kalyani யின் படையப்பா Noodles**
(MixMeat, Beef, Pork, Chicken)
தண்டூரி Chicken
Fish கட்லட்
Fruit Salad with Ice Cream

**Megoring Noodles (Chicken & Shrimp)**
முட்டைச் சம்பல்
தண்டூரி Chicken
Patties
Fruit Salad with Ice Cream

**ரொட்டி**
Mala Chicken
ரோல்ஸ்
டெவில் Beef
Fruit Salad with ice cream

**Fried Rice (Sea Food)**
Beef with Canadian Brocoli
சில்லி Chicken
அன்னாசிப்புடிங்

**பிட்டுக் Combo**
இஞ்சிச் சம்பல்
மீன் பொரியல்
பருப்பு
நண்டு or இறால் or கணவாய்
வட்டிலப்பம்

**மரக்கறிச் சாப்பாடு**
முருங்கைக்காய் கூட்டு, உ. கிழங்கு மசாலா, பருப்பு, பூசணி + மரவள்ளி பால்கறி கோவாவறை, அச்சாறு, பப்படம், ரசம், வடை, பாயாசம்.

**புரியாணிச் சோறு கோழி or ஆடு**
ரோல்ஸ்
முட்டை
தக்காளி, சின்னவெங்காயம் சலாட்
அன்னாசிப்புடிங்

**இடியப்ப புரியாணி (Vegetable)**
கத்தரிப்பிரட்டல்
பருப்பு
உ.கிழங்கு + தக்காளி குழம்பு
அன்னாசிப் புடிங்

நகைச்சுவைத் தொடர்....



# ராசம்மா ராச்சியம் 97





றொறொன்ரோவில் பலகாலமாக இருந்துவந்த குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வு. டேவிட் மில்லரின் கூட்டுமுயற்சி வெற்றி. றொறொன்ரோ புதிய மேயர் டேவிட் மில்லர்.

பிறிம்லி மீனாவின் மகன் கட்டுப்பாடின்றி கண்ட நிண்ட இடங்கள் திரிவது பற்றிப் பலர் கூறியும் மீனா கவனம் எடுக்கவில்லை. பிள்ளைகளுக்கு பெற்றோர் பயப்படுவதும், பெருமை கூறுவதும் அவர்கள் பொலீஸில் பிடிபடாமல் உயிரிழக்கவும் காரணமாக உள்ளது.



**மனதைக் கட்டுப்படுத்தி அவ்வப்போது ஆலோசனை கூறியும், அன்பாகப் பேசியும் இருந்தால் பல கைதுகளையும், உயிரிழப்புக்களையும் தடுத்திருக்கலாம்.**



உலகர் மனதில் நினைத்தாலும் அதனை மீனாவிடம் கூற முடியவில்லை.

**ஒரு விடயம் நடந்து முடிந்தபின் ஆலோசனை கூறவும் திட்டவும் ஓராயிரம் பேர் இருக்கலாம்.**






சினிமா தொலைக்காட்சிகளால புத்தகங்கள், நல்ல நூல்களை வாசிப்பவர்கள் வீதம் மிகமிகக் குறைந்துவிட்டது. பல வாரப்பத்திரிகைகள், மாத இதழ்கள், நூல்கள் பல வெளியிட்டாலும் நான் O C பத்திரிகை படிப்பதில்லை என்பதும், எனக்கு தமிழ் தெரியாதென்று சொல்வதும் நாகரிகமாகி விட்டது. சரி அப்படியென்றால் என்ன தெரியும்? ஆங்கிலமும் தெரியாது, தமிழும் தெரியாது. கனடாவில் ஒரு வருடத்தில் எத்தனை வார, மாத, காலாண்டு, வருட இதழ்கள் வெளிவருகின்றன? யார் இதனைப் படிக்கிறார்கள்? "கண்டது கற்க பண்டிதனாவான்" கண்டாலும் கற்காதவர்கள்?

புத்தகங்கள் எழுதுவது, வெளியிடுவது மட்டுமல்ல. மக்கள் புத்தகங்களைப் படிக்க வேண்டும்.



"தோழனுக்கு சிறப்பு தோழமையை பேணல்
தோழனுக்கு பெருமை தோழர்களின் வளர்ச்சி
தோழனது கடமை தோழர் துயர் துடைத்தல்
தோழனுக்கு வேண்டும் துணிவுடைய மனமே"



இது கவிநாயகர் கந்தவனம் அவர்கள் எழுதிய 'ஓ...கனடா' எனும் புத்தகத்தில் படிப்பினும் செல்வம்... எனும் பகுதியில் இருந்தது.

ஒரு பிள்ளை யார், யாருடனோ சேர்ந்து நல்லாக வந்தால் பெற்றோர் ஒரு போதும் குறை சொல்வதில்லை. ஆனால் ஒருவன் கெட்டுப் போய்விட்டால் தமது பிள்ளையை குறை சொல்லாமல் சேர்ந்து எனது மகன் / மகள் கெட்டுவிட்டதாக பெற்றோர் சொல்வார்கள்.


கூனியின் சொற்கேட்டு கெட்ட பெயரெடுத்தாள் கைகேயி. சகுனியின் சொற்கேட்டு கெட்ட பெயரெடுத்தனர் கௌரவர்கள். கௌரவர்களுடன் சேர்ந்தும் கொடை மூலம் நற்பெயரெடுத்தான் கர்ணன். மாதவியின் மகளாகப் பிறந்தும் நற்பெயரெடுத்தாள் மணிமேகலை. எங்கு சேர்ந்தாலும் தனக்கென திட நம்பிக்கையுடன் வாழப்பழக வேண்டும். ஆக, வஞ்சனை கொண்ட கௌரவர்களிடம் சேர்ந்தும் கர்ணன் நல்ல பெயரெடுத்தான். எவருக்கு என்ன பிரச்சனை நடந்தாலும் செக்கண்ட் புளோர் செல்லம்மா, கொழும்பு 4ஆம் மாடியில் பொலீஸ் விசாரணையை விட கூடிய கேள்விகள் கேட்டு துளைத்து எடுத்து விடுவா.

அது சரி மீனா, நீ சிலோனுக்கு போகேக்கை எல்ஸ்மெயர் இளையாம்பியும் இலண்டன் குமுதாவும், சிங்கப்பூருக்கு போனவையளோ? இல்லாட்டி மலேசியா போனவையளோ என்று கேள்வியை முடிக்க முதல் ஆட்டிலறி அன்னம்மா பார்த்த பார்வையில் செல்லம்மா, பெருமூச்சு விட்டவாறு அதுசரி, எனக்கேன் மற்றவேன்ரை பிரச்சனைகள். உன்ரை மகன் இப்ப யூனிவேசிற்றியோ அல்லது கொலிச்சோ. அண்டைக்கு கோயில்லை கண்டன் எண்டு செல்ல்ம்மா கேட்கும் போது உலகர் கடைக்கண்ணால் பார்த்தார். என்ரை பிள்ளை கொலிச்சும் போகவேண்டாம் யூனிவேசிற்றியும் போகவேண்டாம் பிள்ளை பிள்ளையா இருந்தா காணும் என்று பிறிம்லி மீனா சொல்ல, மீண்டும் அழத்தொடங்கிவிட்டா.




காலை வேலை, பின்னேரம் வேலை. பிள்ளைக்கு ஒழுங்கா சமைச்சு சாப்பாடு குடுக்கேலை, காசைக் குடுத்து கடையளில் வாங்கி சாப்பிடச்சொன்னான். படிக்கிறான், பாடம் குளம்பிப்போகும் எண்டு கோயில் குளமோ, சொந்தபந்தங்களின் கலியாணம் பிறந்தநாள் நன்மை தீமைகளுக்கு கூடக் கூட்டிக் கொண்டுபோறேல்லை. அகதியாக வந்து இன்று பலர் உறவுகளை இழந்து அநாதைகளாக நிற்கின்றனர். இப்ப எனக்கு உறவுகளுமில்லை. பெடியளோடை சேர்த்து பொலிஸ் பிடிச்சது ஏனெண்டு கூடத் தெரியாதாம்.

ஒரு வருசம் குளப்படியும் செய்யக்கூடாதாம். குறிப்பிட்ட சில இடங்களுக்குப் போகக் கூடாதாம். கோயிலில் 40 மணித்தியாலம் தொண்டு செய்யவேணுமாம்.



கடவுளை, சமயத்தை கேலி செய்து கோயிலையும் தேவாலயத்தையும் புறக்கணித்து விட்டு சட்டம் இறுக்கும் போது சமயத்தை நாடும் காலம் இது. அது கூட இப்ப சட்டத்தால் தானே முடிகிறது.



**ஆலயம் தொழுவது சாலவும் நன்று.**

- கலகலப்பு தீசன்

---

15 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 146

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | 3 | |
| | 4 | | | | | | 5 |
| | | 6 | | | | | |
| 7 | | | | 8 | | | |
| | | | | | | | 9 |
| | 10 | | | | | | |
| | | | | | | 11 | |
| 12 | | | | | | | |

**இட-வல**
1. அங்கத்தவர்கள்
4. ஆலமரம் (வல-இட)
5. மது (வல-இட)
7. காணிக்கை அளித்தல்
10. ஆடம்பரம்
11. கோது
12. பனங்கற்கண்டு

**மேல்-கீழ்**
1. சந்தோசம்
2. பெண்யானை
3. களவு
4. நதி
5. விருச்சிகம் (கீழ்-மேல்)
6. கலப்பை
8. தொண்டு (கீழ்-மேல்)
9. சேர்
11. பிரணவம்
12. மகிழ்ச்சி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மி | த் | து | ரு | | தை | ந் | ம |
| ரு | | ணி | | ஏ | ரி | | து |
| க | | க | | ன் | ய | ரி | கு |
| சீ | | ர | | | ம் | ச | த |
| ரி | | ம் | | கை | | | ன |
| ட | ந | | | க் | | வா | ன் |
| ம் | | ரி | | ம | க | ள் | |
| | சு | க | ந் | த | ம் | | தா |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் Nove. 28, 2003க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**145இல் வெற்றி பெற்றோர்**
1) S. Rajaratnam, Etonicoke
2) K. Sujitha, Molton


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
*அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
*வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

(416) 267-0408 731 - 733 kennedy Road [Ken-Mark Plaza]




# ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன் சோதீஸ்
இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




THIS MONTH SPECIAL

November 30, 2003 வரையும் பழைய வாகனம் வாங்குவீர்களானால் ஆயுட் காலத்திற்கும் **Oil change** இலவசமாக செய்து கொடுக்கப்படும்.

416-704-1179

அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm
4334 Kingston Rd, Scarborough



APTAC

# LEARNING CENTRE

Excellent Tutoring for J.K.G to Gr. 12 Students by qualified and experienced tutors.

| | | | |
|---|---|---|---|
| *English | * ESL | * Science | * Algebra |
| * Geometry | * Finite Math | * Calculus | * Biology |
| * Physics | * Chemistry | *French | *Science Projects |

(Including Project Work for University Students)

- Well-organized small group classes
- personal attention to each student
- Homework help and regular lessons
- Gr.3, 6 & 10 EQAO Test Preparation
- Superb 'enjoy and learn' atmosphere for J.K.G to Gr. 2 Students
- Tried-out tutors for all the grades
- Special discounted fees for deserving Students

Contact: Mr. Nallaratnam Masilamani
TESl Cert. (Canada)

Tel: 647-439-3175 / 416-268-8561
Fax: 416-297-4878
5637 Finch Ave. E., Unit 1 & 1A, (Finch & Tapscott)
Office Hours: 10:00AM - 9:00PM

APTAC

# Arts Academy

## அனுபவமும் தகுதியும் வாய்ந்த ஆசிரியர்களின் இசை, நடன வகுப்புக்கள்

- பரதநாட்டியம்: தமிழகத்தில் புகழ் பெற்ற நடன பள்ளியான "கலைக்காவிரி"யின் முன்னாள் ஆசிரியையும், ரொரன்ரோ-கனடா பரதகலாலயத்தின் முதன்மைஆசிரியையுமான திருமதி. ரேணுகா விக்கினேஸ்வரன் அவர்களின் பரதநாட்டிய வகுப்புக்கள்.
- இசை: அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில் பட்டம் பெற்று, பல வருடங்கள் வாய்ப்பாட்டு ஆசிரியராக கடமையாற்றிப் பெயர் பெற்ற சங்கீத பூசணம் திருமதி. நளினி குகசீலன் அவர்களின் பண்ணிசை - வாய்ப்பாட்டு சங்கீத வகுப்புக்கள்.
- வயலின்: திருமதி. அருந்தா ஜெயநாதன் (இலண்டன், இலங்கை, கனடா ஆகிய இடங்களில் சிறப்புகள் பெற்ற அனுபவம் மிக்க ஆசிரியை அவர்களின் வகுப்புக்கள்)
- மிருதங்கம்: தபேலா: திரு. ஆனந்தராஜா பிரேமானந்த் (திருச்சி கலைக்காவிரியின் பெயர் பெற்ற விரிவுரையாளர் திரு. சந்திரசேகரிடம் பயின்று சாதனைகள் பல புரிந்தவர்) அவர்களின் வகுப்புக்கள்

- Keyboard வகுப்புகள் நவம்பர் 1ஆம் திகதி ஆரம்பமாகும்.
- இலவச தமிழ் மொழி வகுப்புக்கள்

தொடர்பு: திரு. நல்லரட்ணம் மாசிலாமணி

தொலைபேசி: 647-439-3175/416-268-8561
தொலைநகல்: 416-297-4878
5637 Finch Ave. E., Unit 1 & 1A, (Finch & Tapscott)
அலுவலக நேரம்: காலை 10:00 - மாலை 9:00

கனடாவின் தலைநகர் ஒட்டவாவில்

# "நம்பிக்கை நாணயம் நந்தா"

வீடு வாங்க விற்க
மற்றும் இலவச ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கும்

முதல் முறையாக வீடு வேண்டுபவர்களுக்கு,
அவர்களுக்கு உள்ள சலுகைகளை அறிந்து கொள்வதற்கும்

உங்கள் வீட்டின் தற்போதய விலையை அறிந்து கொள்வதற்கும்

குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்வதற்கும்

COLDWELL BANKER
Coldwell Banker Coburn Realty

அழையுங்கள் நந்தா




Nantha Aiyadurai, B.Eng
Sales Representative
Office : 613-823-7555
Cell : 613-866 9931
Toll Free : 1 800 472 6512
E-mail: nantha-aiyadurai@coldwellbanker.ca



# 'Super Star' பதவி படுத்தும் பாடு

மக்கள் திலகம், நடிகர் திலகம் ஆகியோர் ஒரு காலத்தில் சினிமாவில் செங்கோல் ஏற்றிக் கொண்டிருந்த நேரம். இருவரும் இரு துருவங்களாக (சினிமா, அரசியல் இரண்டிலும் சரி) இருந்தாலும் ஒருவரை ஒருவர் எதிர்த்து வசை பாடியதில்லை. M.G.R ஒரு நடிகரையேனும் மறை முகமாகவோ, நேரடியாகவே விமர்சித்த தில்லை. சிவாஜியும் அப்படித்தான். அடக்கமாகவேதான் இருந்தார். தங்கள் தொழில்களிலேயே கவனமாக இருந்தார் கள். நிறைகுடம் தழும்பாது என்பார்கள். அப்படித்தான் இருவரும். ஆனால் இவர்களுடைய ரசிகர்கள் மன்றங்களை அமைத்து ஒருவர் மண்டையை ஒருவர்



உடைத்தே காலத்தைக் கழித்தனர். பின்னர் இவர்களின் இடத்தைப் பிடித்துக்கொண்டிருப்பவர்கள் ரஜினி, கமல். ரஜினியும் சரி, கமலும் சரி ஒரு போதும் தங்களை புரட்சி நடிகர் என்றோ நடிகர் திலகம் என்றோ அறிவித்தது மில்லை. ஆனால் இவர்களின் ரசிகர்கள் (தமிழக) ரஜினியை M.G.R ஆகவும் கமலை சிவாஜி ஆகவும் ஒப்பிட்டிருக் கிறார்கள். வியாபார ரீதியில் பல வெற்றிப் படங்களை அளித்தவர் ரஜினி. அற்புதமான நடிப்பினால் வெற்றிப்படங்களை அளித் தவர் கமல். ஆனால் சின்னஞ் சிறுவர் முதல் பெரியவர்கள்வரை எல்லோராலும் விரும்பப்பட்டவர் ரஜினி. நடிப்பாற்றலால் தன்னை மாற்றிக்கொள்வதால் ரசிகர் களால் நேசிக்கப்படுபவர் கமல். ஆனால் இவர்கள் இருவரும் பாலச்சந்தரின் மாணவர்களாக இருந்த காலம் தொட்டே நண்பர்கள். பட விழாக்கள் எதுவாக இருந்தாலும் ஒருவரையொருவர் பாராட்டத் தயங்கியதும் இல்லை.

ஆனால் இன்று!
ரஜினி, கமல் இருவரின் இடத்தைப் பிடிக்கப் பலபோட்டிகள். ரஜினி ஏறத்தாழ இளைப்பாறும் சமயம் வந்துவிட்டது. பாபா படத்தோல்விக்குப் பின்னர் இதுவரை எந்தவித அறிவிப்பும் இவரிடம் இருந்து வரவில்லை.

அந்தக்காலத்தில் பல புதுமுகங்கள் வரத்தொடங்கியவுடன் சினிமாவில் ஒரு குறிப்பிட்ட பாத்திரங்களில் மட்டும் நடித்துக் கொண்டிருந்த மக்கள் திலகம் M.G.R சமயம் அறிந்து அரசியலில் புகுந்து வெற்றிவாகை சூடினார். அது மட்டுமல்ல பதவியில் இருந்த காலத்திலேயே அவர் உயிர் பிரிந்தது. ஆனால் நடிகர் திலகமோ தன் வயதுக்கேற்றபடி கதாபாத்திரங்களைத் தேர்ந்து எடுத்து கடைசிவரை சினிமாவில் நிலையான அந்தஸ்தைப் பெற்றிருந்தார். இவருடன் சேர்ந்து ஒரு காட்சியிலாவது சேர்ந்து தோன்ற மாட்டோமா என்ற ஆதங்கம் பல நடிகர்களிடையே இருந்தது. அதன்படி ரஜினி முதல் விஜய் போன்றவர்கள் நடிகர் திலகத்துடன்



நடித்துப் பெருமை தேடிக்கொண்டனர். ரஜினி, கமல் இவர்களுக்குப் பிறகு மிகவும் எதிர்பார்க்கப்பட்டவர்கள் விக்ரம், அஜித்.

பாலாவின் சேது படத்தில் மிக வித்தியாசமான பாத்திரம். தில், காசி, ஜெமினி, தூள், சாமி என்ற பல வெற்றிப் படங்களை வரிசையாகக் கொடுத்து இன்று முன்னனியில் நிற்பவர் விக்ரம். இவர் இந்த நிலையை அடைய கிட்டத்தட்டப் பத்து வருடங்கள் காத்திருக்க வேண்டிய தாயிற்று. சொல்லப்போனால் 10 வருடகாலத்தில் 9 படங்கள் மட்டுமே பண்ணியிருந்தார். அஜித் கடுமையான சோதனைகளைச் சந்தித்தவர். "ஆசை" படமூலம் அறிமுகமான இவர் பலவித குணச்சித்திரபாத்திரங்களை ஏற்று நடித் திருந்தாலும் வாலி, சிட்டிசன், வில்லன், முகவரி, அமர்களம் ஆகிய படங்களில் இவரின் தனித்தன்மை வெளிப்பட்டது. இவர்களின் சமகால நடிகர்களான விஜய், பிரசாந், சூர்யா ஆகியோரின் வரவு. பல பல ரசிகர் மன்ற அமைப்புக்கள். இதற்கிடையே விஜய், விக்ரம் ஆகியோர் ஒருவரை ஒருவர் புகழ்பாடத் தொடங்கினார்கள். (விக்ரம் ஒரு கமல் என்றும் விஜய் ஒரு ரஜனி என்றும்) இதனால் கொதித்துப் போயிருந்த அஜித் தன்னை ஒரு சூப்பர் ஸ்டார் ஆக மாற்றிக்கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகள். இதற்கு மகுடம் வைத்தாற்



போல "சாமி" பட வெற்றிவிழாவில் சூப்பர்ஸ்ரார் பட்டம் பற்றிய ரஜனியின் பேச்சு இவைகள் எல்லாம் அஜித்தை மிகவும் பாதித்துவிட்டது. சூப்பர்ஸ்டார் பட்டம் தீபாவளிக்குப்பிறகு தனக்குத்தான் சொந்தம் என (ஆஞ்சநேயா பட வெளியீட்டுக்குப் பின்னர்) சகல பத்திரிகைகளுக்கும் பேட்டி அளிக்கத் தொடங்கிவிட்டார். இதற்கிடையே சூர்யா எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் (தனது தந்தையைப்போல) அடுத்தடுத்து சந்தடியில்லாமல் மௌனம் பேசியதே, உன்னை நினைத்து, காக்க காக்க இவைகளின் வெற்றி சூர்யாவை ஒரு வெற்றிப்படநாயகனாகக் காட்டியது.

## பரம்

"குஷி" வெற்றிக்குப் பின்னர் அடுத்தடுத்து தோல்விகளைக் கண்ட விஜய் மிகவும் எதிர்பார்ப்போடு நடித்திருக்கும் படம் கவிதாலயாவின் "திருமலை". இவர் தனக்கென ஒரு ஸ்டைல், தனக்கென ரசிகர் மன்றங்கள் இத்தனைக்கும் அமைதியான பேச்சு. இவைகளை வைத்துக்கொண்டு இன்று முன்னணி இளங் கதாநாயகனாக வலம்வந்து கொண்டிருப்பவர். ஆக மொத்தம் நால்வர். விக்ரம், சூர்யா, விஜய், அஜித் இந்நால்வரின் வெற்றிதோல்வி இந்தத் தீபாவளி வெளியீடுகளின் மூலம் தெரிந்துவிடும் என பத்திரிகைகளின் கணிப்பு. விக்ரம், சூர்யா ஆகியோரின் கூட்டணியில் "பிதாமகன்". விஜய்யின் "திருமலை", அஜித்தின் "ஆஞ்சநேயா" மூன்று படங்களுமே பெரியளவில்



எதிர்பார்க்கப்பட்ட படங்கள். படம் வெளிவருமுன்னரே "பிதாமகன்" இன் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது. அடுத்து போட்டி விஜய். அஜித்தின் படங்கள். "ஆஞ்சநேயா" படத்திற்குப்பி[illegible] நான்தான் சூப்பர்ஸ்டார் என்கின்ற பேட்டி எல்லோரையும் ஈர்த்துவிட்டது.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்




# CLEANING

• வீட்டு CARPET கழுவுதல் • CAR சம்போ Cleaning
அழையுங்கள் நேசன் - 416 - 332 - 1463
Cell - 416-716-0629

DETACHED 4 BEDROOM - ALL BRICK WITH WALKOUT BASEMENT APARTMENT
PRICED TO SELL - $329,900



Absolutely immaculate, 4 + 1 bedrooms, 3 - ½ baths, detached 2 storey, double car garage. Marble floors in kitchen with walk-out to large deck. Master bedroom with 4 piece ensuite and walk-in closets. Gleaming hardwood in hallway and family room. Main floor family room and laundry room. Newer Central air, 6 appliances. TTC at door. Scarboro east. Won't last, call Kamla to view!



KAMLA NGUI-YEN
RE/MAX CROSSROADS REALTY INC.
416-491-4002



# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

நான் சரியானபடி செயற்படுகின்றேனில்லை என நான் நம்புவது தான் எனக்குள்ள ஏதோ பிரச்சனை என்பதை நான் உணர்ந்ததும் என் வாழ்வு சரியாகிவிடும். உங்களுக்கு ஒரு கேள்வி. வாழ்வில் நடைபெறும் ஏதாவது ஒரு செய்முறை என்ன? அது எப்படிச் செயற்படுகின்றது என்பது உண்மையில் உனக்கு விளங்காமல் இருக்கும் போது அதை நீ

## லலிதா புரூடி

எப்படி மதிப்பீடு செய்வது? எமது வாழ்க்கைச் சக்கரம் எத்திசையை நோக்கி எப்படிச் சுழல வேண்டும், இப்போ எப்படிச் சுழல்கின்றது என்பதைக் கொஞ்சமும் விளங்கிக் கொள்ளாமல் எனது வாழ்க்கை யில் ஒன்றுமே சரியில்லை! எல்லாம்! முழுப்பிழை! சீ இப்படியா வாய்க்க வேண்டும் என்று நம்பி அங்கலாய்ப்பது எம் பலரின் வழக்கம். நாம் எப்படி எப்படி வாழவேண்டும். என்ன என்ன செய்யக்கூடாது என்று எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அடிப்படைப் புரிந்துணர்வு இருக்கும். வாழ்க்கையில் எமக்கு என்ன என்ன வேண்டும் எதை எதை நாம் எதிர்பார்க்கின்றோம் என்பது எம் எல்லோருக்கும் தெரியும். எமக்குத் தேவையானவற்றை எப்படிப் பெற்றுக் கொள்ளலாம் என்பது எமக்குத் தெரியும் என உண்மையில் எம்மில் சிலர் நம்புகின்றோம். நாம் இப்படி நடக்கும், அப்படி நடக்காது என்று நம்புவது தான் உண்மையாக நடக்கும் என்பதை எம்மில் சிலர் தான் நிச்சயம் விளங்கிக் கொள்வதில்லை. எமது ஆழ்மனதில் நாம் உணர்வது Gut Feeling என்பது தான் நிச்சயம் நடக்கும். புதிது புதிதாய் அன்றாடம் மலரும் வாழ்க்கைச் செயற்பாடு உனக்கு வழிகாட்டி, ஊக்கு வித்துத் தூண்டி, வாழ்வின் அடுத்த படிக்கு உன்னைத் தயார்ப்படுத்துகின்றது. சிலசமயம் வாழ்வில் பிரச்சனை தரும் நெளிவு சுழிவுகள் நிச்சயம் உன்னைப் பயப்படுத்தும். பிரம்மாண்டமான சவால்கள், பயங்கர அநுபவங்கள், கலங்கும் உணர்வுகள், பயம், ஏமாற்றம் எனும் பிரச்சனைகள் உன்னை எதிர்கொள்ளும். ஆனால் இவையெல்லாம் ஒவ்வொருவ ருடைய வாழ்வில் சகஜம். சர்வசாதாரணம். வாழ்வே இப்படித்தான். எமைச் சோதனை செய்து பலப்படுத்த, எம் முன்னேற்றத்தை உறுதிப்படுத்தி ஊக்கு விக்க நாம் எச்சரிக்கையாய் இருந்தாலும் சிலவேளை தான் இவையெல்லாம் எமை எதிர் கொள்கின்றன. சிலவேளை நாம் நம்பி நினைக்கின்றமாதிரி நான் பிழை விடவில்லை, நான் தோற்றுப்போகவில்லை, எனது வாழ்க்கை பாழாகவில்லை என்பதை நாம் நினைக்கிறமாதிரி அவை எடுத்துக் காட்டுவதில்லை. வாழ்வில் நாம் சந்திப்பவை நடைபெறுபவை சரியா பிழையா என நாம் யூகிக்க முடியாது. நாம் சந்திக்கும் ஒவ்வொன்றிற்கூடாகவும் நாம் பயணம் செய்துதான் இது உண்மை, பொய், சரி, பிழை என நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். நன்மை, தீமை, சுலபமானவை, கஷ்டமானவை என சில வேளை நாம் ஸ்தம்பித்து நின்று சரி பிழை பார்த்தால் வாழ்க்கைச் சக்கரம் எப்படிச் சுழல வேண்டும் என்ற நியதியில் தான் சரியாகத் தான், சுழல்கின்றது என்பதை உணருவோம். இன்றுவரை நான் வாழ்வில் ஏதோ பிழை விடுகின்றேன் என்று நீ நம்பியிருக்கலாம், அல்லது உனது வாழ்க்கை செல்கின்ற மாதிரி சரியில்லை என நினைக்கலாம். ஆனால் உனது வாழ்க்கையின் பாதையோ அது எப்படி எப்படிப் போக வேண்டும் என்பதோ உனக்குத் தெரியாவிட்டாலும் உன்னை எதிர்கொள்ளப் போகும் பிரச்சனைகள் அனைத்தையும் சமாளித்து வெற்றியடையும் சக்தியையும் திறமையையும் உன்னுள் இறைவன் நிச்சயம் படைத்திருக் கிறார் என மனதில் இன்று நம்பிக்கையா யிரு. வாழ்க்கையைச் சரிமுறையாகச் செலுத்தும் வழியை நான் இன்றுமுதல் படித்துப் தேர்ச்சியடையப் போகின்றேன்.



